**N THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. C.C. No. 187/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: P.W-2, L.W- 2 | |
| Name | : Kannaiyan | Defence | : |
| Father Name | : Arumugam | Court | : |
| Village | :V.O.C. South Street, thenpathy | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 64/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.09.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் அ.சா.1 யை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 10 மணிக்கு அ.சா. 1ன் வீட்டில் சத்தமாக இருந்தது. எனது வீடு அ.சா1ன் வீட்டிலிருந்து சுமார் 100 மீட்டர் தூரத்தில் உள்ளது .அப்போது அ.சா. 1ன் வீட்டில் அவரது கணவர் வேலைக்கு சென்றிருந்தார். அ.சா.1 மட்டும் அவரது வீட்டில் தனியாக இருந்தார். அ.சா.1 உடல் ஊனமுற்றவர். அவரது வீட்டில் சத்தமாக இருந்ததால் சென்று பார்த்தேன். அப்போது அ.சா. 1 யை 1,2 எதிரிகள் கட்டைக் கழியால் மண்டையில் அடித்தார்கள். 3, 4 எதிரிகள் சத்தம் போட்டு கொச்சையான வார்த்தைகளால் ஏசிக்கொண்டிருந்தார்கள்,. அ.சா.1 ற்கு மண்டையில் அடிப்பட்டதில் இரத்தம் வந்தது. நான் ஆட்டோவில் அ.சா.1 யை சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு அ.சா.1ன் கணவருக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சொத்து தகராறு உள்ளது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. மாரியம்மாளின் கணவர் சண்முகநாதனின் உடன் பிறந்தவர் 4 பேர். ஆஜர் எதிரிகள் அனைவரும் எருக்கூரில் வசித்து வருகிறார்கள். மாரியம்மாள்

மற்றும் அவரது கணவர் சண்முகநாதன் , ஆஜர் எதிரிகள் ஆகியோர்கள் எருக்கூரில் தான் 30 வருடங்களுக்கு கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். மாரியம்மாளும், சண்முகநாதனும் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு தான் வ.உ.சி தெற்கு தெருவில் உள்ள வீட்டிற்கு குடிவந்தார்கள். சண்முகநாதனுக்கு , எதிரிகள் மற்றும் எதிரிகளின் தாயார் சம்மத்ததுடன் மாரியம்மாளை திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான்.

2. திருமணம் 2002 ல் நடந்தது என்றால் சரியல்ல. வருடம் நினைவில் இல்லை. வ.உ.சி தெற்கு தெருவில் உள்ள வீட்டிற்கு எந்த வருடம் குடி வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரிகள் மற்றும் அவரது தாயார், புகார்தாரரின் கணவர் சண்முகநாதனின் பெயரில்தான் குடும்ப சொத்துகள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. சண்முகநாதன் வெளிநாடு சென்று வந்து இடம் வாங்கி வீட்டைக்கட்டினார். சண்முகநாதன் எந்த வருடம் வெளிநாடு சென்றார் என்று தெரியாது.

3. எதிரிகள் மற்றம் அவரது தாயார் சண்முகநாதனிடம் 24.12.2020 ம் தேதி மாலை 3 மணிக்கு குடும்ப சொத்துக்களை மற்ற சகோதரர்களுக்கு பிரித்து கொடுக்குமாறு கூறினார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது . இந்த வழக்கு தொடர்பாக ஒரு நாள் காலை 10 மணியளவில் குடும்ப சொத்துக்களை பிரித்து தர கோரி பிரச்சினை நடந்தது. அப்போது புகார்தாரரின் கணவர் சண்முகநாதன் அவரது தாயாரை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் பார்த்தபோது அ.சா.1 மட்டும்தான் இருந்தார். அலமேலுவை சண்முகநாதன் மிரட்டியது தொடர்பாக சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற எண் 1558/2020 இ.த.ச.பிரிவுகள் 294(b), 352,506(ii) என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் நான் சண்முகநாதனுக்கு பிணையதாரராக நீதிமன்றத்தில் ஆஜர் ஆனேன் என்றால் சரிதான்.

4. புகார்தாரர் மற்றும் எதிரிகளின் குடும்ப சொத்துகள் அனைத்தும் புகார்தாரரின் பெயரில் எழுதிவைத்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரர் மாரியம்மாள் ஆஜர் எதிரிகளின் மீது சீர்காழீ மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 125/2021 நடைப்பெற்று வருகிறது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடமானது ஒரு தெரு , தனியாக இருக்கும் என்றாலும் இருப்புறம் சேர்த்து 8 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் சண்முகநாதனின் வீட்டிற்கு வடக்கு பக்கத்தில்

பாலசுப்பிரமணியன், பிச்சைமுத்து, நடராஜன்,. எதிர்புறத்தில் சரவணண், ரவி ஆகியோர்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் உள்ளவர்கள் சம்பவத்தை நேரில் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சொல்ல முன்வரவில்லை.

5. அ.சா.1 ன் தலையில் காயம் இருந்தது. வேறு காயங்கள் இருந்ததா என்று எனக்கு தெரியவில்லை. நான் சத்தம் கேட்டுதான் சம்பவம் இடம் சென்றேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகளை பழிவாங்கும்நோக்கத்தில் அ.சா.1 ன் கணவரின் தூண்டுதலின் பேரில் எதிரிகளுக்கு எதிராக போடப்பட்ட பொய்யான வழக்கில் நான் அ.சா.1 ன் கணவரின் நண்பர் என்ற முறையில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடந்திருந்தால் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ளவர்கள் சாட்சியம் அளித்திருப்பார்கள் என்றால் சரியல்ல.